செய்தி வெளியீடு எண். 07/2016 நாள் : 03.06.2016

# விழுப்புரம் மண்டல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்குகளில் சுமைதூக்கும் பணிக்கு பணியாளர்கள் விண்ணப்பத்துடன் நேர்முக தேர்வில் ஆஜராக வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் அறிவிப்பு.

******

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், விழுப்புரம் மண்டலத்தில் இயங்கி வரும் வட்ட செயல்முறை கிடங்குகள் திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், MRM கள்ளக்குறிச்சி மற்றும் MRM திருக்கோவிலூர் ஆகிய கிடங்குகளில் சுமை தூக்கும் பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

அனுபவமும், தகுந்த உடல் திறன் உள்ள 21 வயதுக்கு மேற்பட்டு 35 வயதுக்கு உட்பட்ட நபர்கள் தகுதியுடையவர்களாவார்கள். இப்பணிக்கு 50 கிலோ மூட்டைகளை ஏற்றி/ இறக்கி கையாளவேண்டிய பணியாகும்.

விண்ணப்பதாரர்கள் தங்களின் வசிப்பிட முகவரிக்கான முறையான சான்று, உடல் தகுதிச்சான்று ஆகியவற்றுடன் மண்டல அலுவலகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை தேசிய நெடுஞ்சாலை (தலைமை அரசு மருத்துவமனை அருகில்) விழுப்புரம் அலுவலகத்தில் 14.06.2016, 15.06.2016, 16.06.2016 ஆகிய மூன்று தினங்களில் நேர்முக தேர்வில் ஆஜராக வேண்டும்.

தகுதி உள்ளவர்களுக்கு உடனடியாக சுமைப்பணி வேலைவாய்ப்பு வழங்கப்படும். வேலைவாய்ப்பு பெறும் நபர்களுக்கு அரசால் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலி வழங்கப்படும். இப்பணி முற்றிலும் தற்காலிகமானது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.